IN THE COURT OF THE SUBORDINATE(SUB JUDGE), KANGAYAM

| |
|---|
| MCOP.NO.225/2022 |
| PW - 1 |

Deposition of Witness.

| | | | |
|---|---|---|---|
| Name/பெயர் | மெய்யழகன் | Father's Name/ தந்தை பெயர் | குமாரசாமி |
| Village/கிராமம் | | Taluk/வட்டம் | காங்கயம் |
| Calling/தொழில் | | District/மாவட்டம் | திருப்பூர் |
| Date/தேதி | 09.06.2026 | Age/வயது | 50 |

Solemnly affirmed by in accordance with the provision of the Indian Oath Act 44 of 1969, on 09.06.2026 at 1.10 a.m to 1.25 a.m.

நான் மனுதாரராகவும் என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. என் தகவலின் பேரில்தான் தயார் செய்யப்பட்டுள்ளது. மசாஆ.1 முதல் மசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மசாஆ. முதல் ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை:**

1.விபத்து எவ்வாறு நடந்தது என்பது நேரடியாக உடனே எனக்கு தெரியாது விபத்துக்கு பின்னிட்டு தான் நான் சென்று பார்த்தேன். விபத்து நடந்த சாலை கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்லும் சாலை ஆகும். அந்த சாலையில் சோமசுந்தரம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தார்.அவர் மீது மோதியதாக சொல்லும் வாகனம் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது என்றால் சரிதான்.

2.மேற்படி சாலையின் வலது புறத்தில் விபத்து நடந்தது என்பதை நிரூபிக்க நான் காவல்துறையினர் முன்னிறுத்திய

வரைபடத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சோமசுந்தரம் விபத்து சமயத்தில் அவராக சாலையின் மத்தியில் வந்து 1ஆம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி தென்புறத்தில் விபத்தை ஏற்படுத்தி அது வரைபடத்தில் குறியீடு செய்யப்பட்டதால் தான் அதை நாங்கள் வேண்டுமென்றே மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது தவறு .

3. இவ்வழக்கின் குற்ற அறிக்கையை இம்மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்திற்கு காரணம் இறந்து போன சோமசுந்தரம் தான் என வழக்கு ஏற்கனவே காவல்துறையால் முடிக்கப்பட்டு விட்டதால்தான் அதை வேண்டுமென்றே நாங்கள் இம்மனுவில் ஆவணமாக முன்னிறுத்தி இல்லை என்றால் அது தவறு. மேற்படி விபத்திற்கு காரணமே சோமசுந்தரம் என்பதால் இம்மனுவே நிலைக்கத்தக்கதல்ல என்றால் அது சரி இல்லை. இந்த விபத்திற்கு ஒன்றாம் எதிர்மனுதாரர் எந்த வகையிலும் காரணம் இல்லை என்றால் அது தவறு. விபத்திற்கு பிறகு இரண்டு முறை சோமசுந்தரம் திருப்பூர் ஆதார் மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தால் சரி தான்.

4.மேற்படி சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து அவர் வெளியேறும்போது அவர் உயிருக்கு குந்தகம் ஏற்படும் வகையில் இருந்தது என்பது குறித்து ஆவணக் குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.மேலும் அவர் தொடர் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் நான் முன்னிறுத்தவில்லை என்றால் சரிதான்.

5. 27.07.2021ம் தேதியில் சோமசுந்தரம் பரணி மருத்துவமனையில் சிகிச்சையிருந்து தான் காலமானார் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. சோமசுந்தரத்தின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரிதான். விபத்துக்கும் அவர் மரணத்துக்கும் சம்பந்தமில்லை என்பதால் தான் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை என்றால் சரி இல்லை.

6.மேலும் பிரேத விசாரணை செய்ய காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் முன்னிறுத்தவில்லை. மேற்படி காய வழக்கை இறப்பு வழக்காக மாற்றி அதிகமான இழப்பீடு பெறுவதற்காக தவறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது தவறு.மேலும் இறந்து போனவரின் சகோதரன் நான் இறந்து போனவரை சார்ந்து இல்லை என்றும் மேலும் அவருடைய வாரிசுதாரர் இல்லை என்றும் எனவே நான் மனுதாரராக இறந்து போனவர் சார்பாக இழப்பீடு கூறும் உரிமை இல்லை என்றால் அது தவறு. இறந்து போனவரின் வருமானத்தை காண்பிக்க ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை. நான் பல்வேறு தலைப்புகள் கூறியுள்ள இழப்பீடுகள் தவறானது மற்றும் அதீதமானது என்றும் அவை மனுவிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் அது தவறு. என்னுடைய மனு நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு.

7. மேற்படி இரண்டாம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையை ஒன்றாம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்.

**மூன்றாம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை:**

8. மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் இந்த விபத்திற்கு காரணம் ஒன்றாம் எதிர்மனுதாரர் தான் என சொல்லி உள்ளேன். நான் கேள்விப்பட்டவரை இந்த விபத்திற்கு காரணம் ஒன்றாம் எதிர்மனுதாரர் தான். மூன்றாம் எதிர் மனுதாரரை இம்மனுவில் சாதாரண தரப்பினராக தான் சேர்த்துள்ளேன். மேலும் காப்பீட்டின் படி இந்த விபத்திற்கு காரணம் இறந்து போன சோமசுந்தரம் தான் என்ன நீதிமன்றம் கருதும் பட்சத்தில் கூட மூன்றாம் எதிர்மனுதாரர் அப்போது இருந்த காப்பீட்டின் படி மூன்றாம் தரப்பினருக்கு மட்டும் தான் இழப்பீடு வழங்க முடியுமே தவிர உரிமையாளருக்கு இல்லை என்றால் சரியில்லை. மூன்றாம் எதிர்மனுதாரை பொறுத்து இம்மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் அது தவறு.

Signature of the witness.

Taken down before me in open Court, read over to the witness and admitted to be correct.

K ANANTHAN

Digitally signed by K ANANTHAN
Date: 2026.06.09 19:54:39 +0530

**Subordinate Judge,**
**Subordinate Court,**
**Kangayam.**